**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

### கோவை கொடிசியா வளாகத்தில் திருவிழா தொடக்கம்

# தமிழகத்தில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் அதிகரிப்பு

- **மாநிலத்தில் 2,300-ஆக இருந்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் எண்ணிக்கை கடந்த 2 ஆண்டுகளில் 3 மடங்கு அதிகரித்து, 6,800-ஆக உயர்ந்துள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.**



கோவையில் நேற்று தொடங்கிய ஸ்டார்ட்-அப் திருவிழாவில், தொழில்முனைவோருக்கு ஆதார நிதியை வழங்கினார் அமைச்சர் தா.மோ.அன்பரசன். உடன், தமிழக தொழில் முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டிஆர்பி.ராஜா, மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, எம்எல்ஏ வானதி சீனிவாசன் உள்ளிட்டோர். படம்: ஜெ.மனோகரன்

● **கோவை**

தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 3 மடங்கு அதிகரித்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

தமிழக அரசு சார்பில் இரண்டு நாட்கள் நடைபெறும் 'ஸ்டார்ட்-அப் திருவிழா' கோவை கொடிசியா தொழில் மற்றும் வர்த்தகக் கண்காட்சி வளாகத்தில் நேற்று தொடங்கியது.

தமிழக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் விழாவைத் தொடங்கி வைத்துப் பேசியதாவது: கோவையைத் தொடர்ந்து அனைத்து மண்டலங்களிலும் ஸ்டார்ட்-அப் திருவிழாக்கள் நடத்தப்படும். புதிய கண்டுபிடிப்புகள் தான் உலகை ஆள்கின்றன. இத்தகைய படைப்புகளை உருவாக்குவதில் தமிழகம் முன்னேறி உள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 8 லட்சத்து 98 ஆயிரம் பேருக்கு தொழில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே முதல் முறையாக 28 குறுந்தொழில் கிளஸ்டர்களுக்கு தமிழகத்தில் உரிய வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. தொழில் உரிமை பெறுவதற்கான நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

தமிழக தொழில், முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டிஆர்பி.ராஜா பேசியதாவது: இந்தியாவே வியந்து பார்க்கும் வளர்ச்சியை தமிழகம் பெற்றுள்ளது. ஜவுளி, ஆட்டோமொபைல், எலெக்ட்ரானிக்ஸ் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் தமிழ்நாடு முதலிடம் வகிப்பதில், கோவை முக்கியப் பங்கு வகிக்கிறது.

ட்ரோன் டெஸ்டிங் வசதிகள் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் உள்ளன. ஜவுளி வர்த்தகம் 2027-ம் ஆண்டுக்குள் 350 மில்லியன் டாலர் வரை உயரும். எலெக்ட்ரிக் வாகனங்கள் விற்பனையில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. தொழில் வளர்ச்சிக்காக முதல்வர் ஸ்டாலின் வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு தொடர்பாக ஜப்பான் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும், இரு மாதங்களுக்குள் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டன.

கோவையில் தொழில்நுட்ப ஜவுளித் துறை பெரும் வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கிறது. தமிழக முதல்வரின் இலக்கான ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி தமிழக அரசு வேகமாக முன்னேறி வருகிறது.

அடுத்த ஆண்டு ஜனவரி 7, 8-ம் தேதிகளில் சென்னையில் உலக முதலீட்டாளர் மாநாடு பிரம்மாண்டமான முறையில் நடத்தப்படும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

விழாவில், சென்னையில் இருந்து காணொலி வாயிலாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழகத்தில் 2,300-ஆக இருந்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் எண்ணிக்கை, கடந்த 2 ஆண்டுகளில் 3 மடங்கு அதிகரித்து தற்போது 6,800-ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 109 நிறுவனங்களுக்கு தலா ரூ.10 லட்சம் வீதம் ஆதார நிதி வழங்கப்பட்டுள்ளது.

எங்களுக்கு மக்கள் அளித்த அதிகாரத்தை, வாளாவியதாக கருதவில்லை. திருக்குறள்போல நெறிப்படுத்தி, அதிகாரத்தை மக்களுக்காக செயல்படுத்தி வருகிறோம். தமிழகத்தை புத்தொழில் நிறுவனங்களுக்கு ஏற்ற மாநிலமாக மாற்றுவோம். இவ்வாறு முதல்வர் பேசினார்.

விழாவில், 'ஸ்டார்ட்-அப் தமிழ்நாடு' தகவல் சேவை மையத்தை அமைச்சர் டிஆர்பி.ராஜா தொடங்கிவைத்தார். மேலும், தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித் திட்டம் மூலம் 20 பயனாளிகளுக்கு ஒப்புதல் ஆணைகளை வழங்கினார். அதேபோல, பெண்களுக்கான சிறப்புத் தொழில் விரிவாக்கப் பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களில் தொழில் முனைவோர் குழுக்களை தொடங்கி வைத்தார்.

விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்துவைத்தார். தமிழக அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைச் செயலர் அருண் ராய், தமிழ்நாடு ஸ்டார்ட்-அப் மற்றும் இன்னவேஷன் திட்ட இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அதிகாரி சிவராஜா ராமநாதன், சட்டப்பேரவை உறுப்பினர் வானதி சீனிவாசன், கொடிசியா தலைவர் திருஞானம், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி மேயர் கல்பனா, ஆணையர் பிரதாப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**



↑ உலக வில்வித்தையில் மகளிருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியினர்.

# உலக வில்வித்தையில் இந்தியாவுக்கு இரு தங்கம்

● பாரீஸ்

உலக வில்வித்தையில் ஆடவர், மகளிருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

உலக வில்வித்தையின் 4வது நிலை போட்டிகள் பாரீஸ் நகரில் நடைபெற்றுவருகிறது. இதில் ஆடவருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவில் ஓஜஸ் பிரவின் தியோடலே, பிரதமேஷ் ஜாவ்கர், அபிஷேக் வர்மா ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி இறுதிப் போட்டியில் 236-232 என்ற கணக்கில் அமெரிக்காவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது.

ஆடவர் பிரிவில் 14 அணிகள் கலந்துகொண்ட தகுதி சுற்றில் இந்திய அணி 2,127 புள்ளிகளை குவித்து 4வது இடம் பிடித்திருந்தது. தொடர்ந்து நடைபெற்ற கால் இறுதிக்கு முந்தைய சுற்றில் இத்தாலியையும், கால் இறுதி சுற்றில் மெக்சிகோவையும் வென்றது. அரை இறுதியில் கொரியாவை வீழ்த்தி இறுதிப் போட்டியில் கால்பதித்திருந்தது.

மகளிருக்கான காம்பவுண்ட் அணிகள் பிரிவில் அதிதி கோபிசந்த் சுவாமி, ஜோதி சுரேகா வென்னம், பர்னீத் கவுர் ஆகியோரை கொண்ட இந்திய அணி இறுதிப் போட்டியில் 234-233 என்ற கணக்கில் மெக்சிகோ அணியை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது.

மகளிர் பிரிவில் இந்திய அணி 2,113 புள்ளிகள் குவித்து தகுதி சுற்றில் முதலிடம் பிடித்திருந்தது. முதல் சுற்றில் இந்திய மகளிர் அணிக்கு பை வழங்கப்பட்டிருந்தது. கால் இறுதி சுற்றில் எஸ்டோனியாவை வீழ்த்திய இந்திய அணி அதன் பின்னர் இறுதி சுற்றில் பிரிட்டனை தோற்கடித்தது.

மகளிருக்கான காம்பவுண்ட் தனிநபர் பிரிவில் இந்தியாவின் ஜோதி சுரேகா வென்னம் வெண்கலப் பதக்கம் வென்றார். மற்ற இந்திய வீராங்கனைகளான அவ்னீத் கவுர், பிரனீத் கவுர் ஆகியோர் 2வது சுற்றுடன் வெளியேறினர். அதிதி கோபிசந்த் கால் இறுதியில் தோல்வி அடைந்தார்.

EVA STALIN IAS ACADEMY